உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.


தொகுதி-௪௨.] தாரண-ஹூ பங்குனி-மீ [பகுதி-௫.

Vol. 42. March—April 1945. No. 5.


உள்ளுறை.


ஐரோப்பியப்போர்வெற்றி:—அநுபந்தம் (அட்டையின் பின்புறம்)

எயில்கோடல்:— மகாமகோபாத்தியாய பண்டிதமணி திரு. மு. கதிரேசச்செட்டியாரவர்கள் ௬௧—௭௦

வாழ்க்கையும் விஞ்ஞானமும்:- ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L. ௭௧—௭௫

மதிப்புரை:— ... ... ... ... ௭௬



பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1945.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

# ஐரோப்பியப்போர்வெற்றி

உலகத்தைப் பலதுறையினும் பெரிதும் அலைத்துவந்த ஐரோப்பியப் பெரும்போர் முடிவுற்று நேசக்கட்சியார் வெற்றிபெற்றதறிந்து மிகவும் மகிழ்வடைகின்றோம்.

இப்பெரும்போரில் நம் அரசர்பெருமானே வெற்றி யடையவேண்டுமென்றுவிரும்பிய நாம், இறைவனருளால் நம் அரசர்(பெருமானொடுகூடிய நேசக்கட்சியார்)

"வெற்றி யடைந்திடு வாரே
மேன்மை யடைந்து விளங்கிடு வாரே
சற்றும் ஐயப்பட வேண்டா—இது
சத்தியம் சத்தியம் சத்தியம் கண்டீர்" *

என்று 1940-ஆம் ஆண்டிலேயே அறைந்துகூறியதுண்டு. அது மெய்யாகுமாறு அருள்புரிந்த இறைவனது பெருங் கருணைத்திறத்தை வியந்து பாராட்டுகின்றோம்.

இவ்வாறே ஆசியாதேச மஹாயுத்தத்திலும் விரைவில் நம் அரசர்பெருமானுக்கே வெற்றியுண்டாக அருள்புரியும் வண்ணம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழி இறைவன் மலர்ப்பதங்கள் வாழி வீர மக்கள்குழாம்
வாழி அறங்க ளனைத்தும்நனி வாழி நேசக் கட்சியினர்
வாழி ஆறவது ஜார்ஜு மன்னர் பெருமான் நீடூழி
வாழி உலகு பகைநீங்கி மழையே முதலாம் வளம்பெற்றே.

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

---

* செந்தமிழ்த்தொகுதி ௩௮. பக்கம் ௫௨௫. பாட்டு-23.

உ
கடவுள் துணை.
# செந்தமிழ்.

தொகுதி-சஉ.] தாரண-ஸூ பங்குனி-மீ [பகுதி-ரு.
Vol. 42. March—April 1945. No. 5.

## *எயில்கோடல்.

மஹாமஹோபாத்தியாய பண்டிதமணி திரு. மு. கதிரேசச்செட்டியாரவர்கள்.

தமிழ்நாட்டுப் போர்வகைகளுள் எயில்கோடல் என்பதும் ஒன்று. எயில் என்பது மதில்; கோடல்—கொள்ளுதல்; எனவே ஓர் அரசன் தன் பகையரசனது மதிலைப் படைவீரர்களுடன் சென்று வளைத்துக்கொள்ளுதல் என்பதாம்.

தமிழ்நூலார் பொருளை அகம் புறம் என இருகூறாக வகுத்து அகத்திற் காதலையும் புறத்தில் வீரத்தையும் விரிவாக எடுத்துரைத்துள்ளார். புறப்பொருளாகக் கூறப்படுவன வேறு பல உளவெனினும் சிறப்புமுறையிற் பேசப்படுவது வீரம்பற்றிய போர்ச்செயலேயாகும். தொல்காப்பியம் என்னும் பண்டைத் தமிழிலக்கண நூலிலே பொருளதிகாரத்துப் புறத்திணையியலில் இப்போர்ச்செயல்கள் எழுதிணைகளாகவும், பற்பல துறைகளாகவும் வகுக்கப்பட்டுள்ளன. இரண்டு அரசர்கள் தம்முட் போர்செய்யக்கருதியக்கால்

* 5—4—45ல் திருச்சி வானொலியிற் பேசப்பட்டது. அநுமதிபெற்று வெளியிடப்படுகிறது.

முதலில் ஒருவன் மற்றொருவனது நாட்டில் வாழும் புண்ணியப் பிறப்புக்களாகிய பசு முதலியவற்றைத் தீங்குசெய்யாமல் ஆங்குநின்றும் அகற்றல்வேண்டித் தம் படைவீரரைக்கொண்டு களவினாற் கவர்ந்துகொண்டு அவற்றைப் பாதுகாப்பன். இவ்வொழுக்கத்திற்கு வெட்சித்திணை என்று பெயர். 'திணை' என்பது ஒழுக்கமாகும். வெட்சி முதலியன அவ்வவ்வொழுக்கத்திற்கு அறிகுறியாக அணிந்துகொள்ளப்படும் மலரை உணர்த்தும். பசுநிரை கவர்ந்துவரும் வீரர் அணிந்துகொள்வது வெட்சிப்பூவாகும். இப்பூப்பொன்னினால் ஆக்கப்பட்டு அரசனால் அவர்க்கு வழங்கப்படுவதும் உண்டு. கவர்ந்துகொள்ளப்பட்ட பசுநிரைகளை மீட்டுக்கோடலும் வெட்சித்திணைப்பாற்படும் என்பர்.

அதன்பின்னர் ஒருவன் நிலத்தை மற்றொருவன் கொள்ளும் வேட்கையாற் போர்குறித்துச்செல்லுதல் நிகழும். இங்ஙனம் செல்லுதலையும், ஒருவன் மேற்சென்றால் அங்ஙனம் செல்லப்பட்டானும் தன்னிலம் அழியாமற்காத்தற்கு எதிரே படையெடுத்து வருதலையும் வஞ்சித்திணையாம் என்பர். இவ்வாறு போர்குறித்துச் சேறலை அரசர்க்குரிய சந்திமுதலிய அறுவகைக்குணங்களுள் "யானம்" என்பர் வடநூலார். போர்குறித்துச் சென்றவன் பகைவனதுமதிலை வளைத்து முற்றுகையிடுதலையும் அம்மதிலுள்ளிருந்த வேந்தன் அம்மதில் சிதையாவாறு காத்துக்கோடலையும் உழிஞைத்திணையாம் என்பர். இக்கொள்கை தொல்காப்பியத்திற் கண்டது. இரண்டிரண்டு கூறாக இங்கே கூறப்பட்ட மூன்றன்கண்ணும் பிற்கூறுகளுக்கு வெவ்வேறு திணைப்பெயர் கூறுவாரும் உளர். அதன்பின் இருபெருவேந்தரும் கைகலந்து படைகளுடன் போர்புரிதலைத் தும்பைத்திணை எனவும், வெற்றிபெறுதலை வாகைத்திணை எனவும் கூறுவர். போரில் வெற்றிபெற்ற தன் படைவீரர்க்கு அரசன் பொன்னலாக்கப்பட்ட பூ வழங்குதலை,

"நிறஞ்சிதை கவயமொடு நிறம் புண்கூர்ந்து
புறம்பெற வந்த போர்வாள் மறவர்
வருக தாமென வாகைப் பொலந்தோடு
பெருநா ளமயம் பிறக்கிடக் கொடுத்து"

என்னும் சிலப்பதிகார அடிகளாலும் அறியலாம். இத்துணையும் கூறியவை தமிழர் போர்முறைவரலாற்றுநிகழ்ச்சிகளின் சுருக்கமாகும்.

இவற்றுள் இங்கே எடுத்துக்கூற வேண்டியது ஓரரசன் தன் பகையரசனுடைய மதிலைப் படைவீரருடன் சென்று வளைத்துக் கொள்ளுதலாகிய எயில்கோடல் ஆகும். தொல்காப்பியம் புறப்பொருள்வெண்பாமாலை முதலியவற்றில் எயில்கோடல் என்னும் சொல்லால் ஒரு துறை வகுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தொல்காப்பியத்தில்,

"முழுமுத லரணம் முற்றலுங் கோடலும்
அனைநெறி மரபிற் றாகு மென்ப"

என்று கூறப்பட்டுள்ளது. மதில்வளைத்தலை முற்றல் எனவும், அம்மதிலுள்ளிருக்கும் வேந்தன் அதனைக் காத்துக்கோடலைக் கோடல் எனவும் கூறியிருக்கின்றனர். புறத்திரட்டு என்னும் நூலிலே பகைவனது மதிலை முற்றுகையிட்டு வளைத்துக்கோடல் எயில்கோடல் என்று கூறப்பட்டுள்ளது. அம்முறையே இங்கே விளக்கப்படுவதாகும்.

ஓர் அரசனுடைய நாட்டிற்கும் தலைநகர்க்கும் பாதுகாப்பாகவுள்ள அரண்கள் பலவாகும். தலைநகர்க்காப்பாகவுள்ள அரண்களுள் மதிலரண் சிறந்ததாகும். இம் மதிலரணுக்குப்புறத்தே அரணாகவுள்ளவை ஆழமிகவுடைய அகழியும் நீரும் நிழலுமில்லாத மருநிலமும் மரஞ்செடிகள் செறிந்த காடும் மலையும் என்னும் இயற்கையும் செயற்கையுமாகிய அரண்கள் பலவாகும்.

இவற்றுள் கடல்நீரும் மலையும் மருநிலமும் இயற்கையரண்க ளாகும். அகழியும் மரஞ்செறிந்த காடும் இவற்றாற் சூழப்படும் மதிலும் செயற்கையரண்களாகும். இவ்வமைப்பை,

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்"

என்னுந் திருக்குறளானும்,

"நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி
வான்றோய் வன்ன புரிசை விசும்பின்
மீன்பூத் தன்ன வுருவ ஞாயிற்
கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை
அருங்குறும் புடுத்த கானப் பேரெயில்"

என்னும் புறப்பாட்டானும் அறியலாம்.

இப்பாடற்பகுதியில் அகழியின் ஆழமும் மதிலின் உயரமும் காட்டின் செறிவும் நன்கு விளக்கப்பட்டிருத்தல் அறிந்து மகிழத் தக்கது. இவற்றுட் சிறப்பாகக் கருதத்தக்கது மதிலரண் ஆகும். இது கற்களாலும் சுடுமண்ணாகிய செங்கற்களாலும் சுண்ணாம்பு முதலியவற்றாலும் வன்மையுற மிக்க உயரமும் அடியகலமும் உடையதாக அமைக்கப்படுவதாகும். இதனை,

"உயர்வகலந் திண்மை அருமையிந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்"

என்னுந் திருக்குறளால் அறியலாம்.

இம்மதில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல அமைக்கப்படுதலும் உண்டு.

"தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்
ஏழெயிற் கதவம் எறிந்துகைக் கொண்டுநின்
பேழ்வா யுழுவை பொறிக்கும் ஆற்றலை"

என்னும் புறப்பாட்டில் ஏழு மதிலுள்ள தலைநகரம் ஒன்று பாண்டி நாட்டில் இருந்ததாகவும், அஃது இப்பொழுது "ஏழுபொன்

கோட்டை" என்று வழங்கப்படுவதாகவும் அறிகின்றோம். இத்தகைய அரண்களின் அமைப்பினாலேயே அரசனுடையநாடு அல்லது தலைநகரம் பகைவரால் அழிவுநோமற் பாதுகாக்கப்படுவதாகும். இப்பொழுது நடைபெறும் மேலைநாட்டுக் கடும்போர்களில் இங்கிலாந்து முதலிய தீவங்கள் இயற்கையரணாகிய கடலாலும் செயற்கையரணாகிய மதிலாலும் பாதுகாக்கப்படுதலை அறிந்துவருகின்றோம்.

இம்மதில்களில் பகைவர் அணுகாவண்ணம் பல வகையான பொறிகள் அமைக்கப்படும் என்பதைச் சிலப்பதிகாரம் முதலிய பண்டை நூல்களில் விளக்கமாக அறியலாம். அப்பொறிகளாவன: தானே அம்பு எய்யும் வில்லும், சேர்ந்தாரைக்கடிக்கும் குரங்கும், கன்மாரி பெய்யும் கவணும், காய்ந்திறைத்தலாற் சேர்ந்தாரைத் துன்புறுத்துவதாகிய நெய்யும், இரும்பை உருக்கியுமிழும் உலையும், கற்களை நிறைத்து வீசும் கூடையும், அகழியைக் கடந்து மதில்பற்றுவாரைக் கோத்தெடுக்குந் தூண்டிலும், அணுகினாரைக் கழுத்திற்பூட்டி முறுக்குஞ் சங்கிலியும், உச்சியைக் கொத்தி மூளையை உறிஞ்சும் புள்ளும், மாற்றான்மேற்சென்று கண்ணைக்குத்தும் சிச்சிலிப் பறவையும், மதிலிடத்து ஏறுவார் உடம்பைக் கொம்பினாற் குத்திக் கிழிக்கும் பன்றியும், மதிலைப் பற்றுவார்கையைக் குத்தும் ஊசியும், கோல் குந்தம் வேல் சூலம் முதலிய படைப்பொறிகளும் பிறவுமாம்.

இத்தகைய பொறிகளோடு இவற்றை அமயங்கண்டு இயக்கிப் பாதுகாக்கும் நல்ல வீரரையுடையதாகவும் இருத்தல்வேண்டும். வீரரில்வழி மதில் பாதுகாக்கப்படுதல் அரிதென்பதை,

> "எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
> இல்லார்கண் இல்ல தரண்"

என்னும் திருக்குறள் வலியுறுத்தும்.

மேற்குறிப்பிட்ட பொறிகளேயன்றி வலிய பகைவீரர் ஏறுதற்கு இடனில்லாதிருத்தற்பொருட்டு மதில்களில் நெய்பூசப்படுதலும், பகைவர்க்கு இழிவுதோன்ற மகளிர் உருவத்தை அச் சுவர்களில் அமைத்துப் பந்தும் பாவையுமாகிய கருவிகளை வீசச்செய்தலும் உண்டு என்பதை, தகடூர்யாத்திரை என்னும் பழைய தமிழ் நூலில்,

> "மறலுடை மறவர்க்கு ஏறவிட னின்றி
> நெய்யோ டையவி யப்பி"

எனவும்,

> "பந்தும் பாவையும் பசுவரிப் புட்டிலும்
> என்றிவை பலவுஞ் சென்றுசென் றெறியும்
> முந்தை மகளிரை யியற்றி"

எனவும் வரும் அடிகளால் அறியலாம்.

போர்நிகழ்ச்சிகளுள் பகைநாட்டுவேந்தனது மதிலை முற்றுகையிடுதல் ஓரரசனது ஆற்றன்மிகுதியைப் புலப்படுத்துவதாகும். இருபெருவேந்தருள்,

> "வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
> துணைவலியும் தூக்கிச் செயல்"

என்றபடி வலியின்நிலைமைகளை நிறுத்துணர்ந்து அவ்வலி மிகுதியாகப் படைத்த அரசனே படைமுதலியவற்றோடு வேற்றுநாடு சென்று பகையரசனது மதிலை முற்றுகையிட இயலும். இங்ஙனம் முற்றுகையிடுதலால் வெளியிடத்திருந்து உள்ளே வரவேண்டிய பொருள்கள் வாராமல் தடைப்படுதலாலும் உள்ளிடத்திருப்போர் தப்பிப்பிழைத்து வெளிச்செல்லுதற்கு இயலாமையாலும் மதிலகத்தேயுள்ள அரசனுக்கும் குடிமக்களுக்கும் நேரும் துன்பங்கள் பலவாம். இத்துன்பநிலையைப்பற்றிச் சோழன்-நலங்கிள்ளி என்பான் ஆவூர்மதிலை முற்றுகைசெய்திருந்தகாலத்து அம்மதிலுள் அகப்பட்டுப் போர்செய்தற்கு முற்படாமலிருந்த நெடுங்கிள்ளி என்னும் சோழனை நோக்கிக் கோவூர்கிழார் என்னும் புலவர் பாடிய பாடற்கருத்து இங்கே நினைக்கத்தக்கது. அக்கருத்து வருமாறு:-

அரசே! யானைகள் உணவுப்பொருளின்மையால் கவளம்பெரு மலும் பிடியொடுகூடி நீராடன் முதலிய செய்யாமலும் நிலத்திற் கிடந்து புரண்டு இடியொலிபோற் கதறவும், பால் பெருமையாற் குழவிகள் அழவும், மகளிர் பூவின்றி வறுந்தலையை முடிக்கவும், இல்லந்தோறும் வாழுமக்கள் நேர்ந்த இடுக்கண் கருதி வருந்திக் கூக்குரலிடவும் இவற்றைக் கண்டும் கேட்டும் நாணாது நீ அரண்மனை யில் இனிதாகவிருத்தல் வருந்தத்தக்கதாகும். ஆதலால்,

"அறவை யாயின் நினதெனத் திறத்தல்
மறவை யாயிற் போரொடு திறத்தல்
அறவையும் மறவையும் அல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங் காலே"

என்பதாகும். இதன்கண் வீரமுடையையாயின் போரினால் மதிற் கதவைத் திறத்தல்வேண்டும் எனவும், குடிகளிடத்து அன்புடையை யாயின் முற்றுகையிட்ட பகைவனைநோக்கி "இம்மதில் நின்னுடை யது" என்று சொல்லித் திறக்கவேண்டும் எனவும், இவ்விரண்டு மின்றி ஒருபால் ஒதுங்கியிருத்தல் நாணத்தக்கதெனவும் கூறியிருத் தலும் வீரமுடையை அல்லையாயின் என்று கூறவேண்டியதைக் "குடிகளிடத்து அருளுடையையாயின்" என்று நயம்படக் கூறி யிருத்தலும் சிந்தித்து இன்புறத்தக்கன.

இனி ஒரு நகரத்திற்குச் செயற்கையரணாகிய மலையாதல் கட லாதல் அமைந்திருப்பின் எத்துணை வலிபடைத்த வீரரும் அவற் றைக் கடந்து உட்புகுதல் அருமையாகும். தமிழ்நாட்டுவள்ளல் களுள் ஒருவனாகிய பாரி என்பானுக்குப் பறம்புமலை அரணாக அமைந்திருந்தபடியால் தமிழ்நாட்டு முடியுடை மூவேந்தரும் தம் படைவீரர்களைக்கொண்டு முற்றுகையிட்டும் அப் பாரியை வெல்லு தல் அவர்க்கு அரிதாயிற்று. அம் மலையரணே பாண்டிநாட்டிற் கொடுங்குன்றம் அல்லது பிரான்மலை என்று இப்பொழுது வழங் கப்படுகிறது. அம் மலையரணைத் தாக்குதல் மூவேந்தரார்றற்கும்

இயலாததாகவே நெடுங்காலம் தம் படைவீரர்களையே அம்மலையாணுக்குப்புறத்தே அரணாக அமைத்து முற்றுகையிட்டனர். இப்படி முற்றுகையிட்டதன் நோக்கம் போக்குவரத்து நிகழாமைப் பொருட்டும் வெளிநாட்டுஉணவு உட்புகுதாமையால் அகத்து வாழ்வோர் வலிகுறையவேண்டும் என்பதும் ஆம். இதனை,

"போக்கு வரத்துப் புரியாமல் வண்பறம்பைத்
தாக்கு படையாற் றனியடைத்தார்—ஆக்கும்
உணவும்பல் பண்ணியமும் உட்புகா தோம்பத்
தணவும் வலியென்னத் தாம்"

என்பதனால் அறியலாம்.

இங்ஙனம் நெடுங்காலம் வளைத்துக்கொண்டமையால் உணவு சுருங்கவே, என் செயலாம்! என்று சூழ்ந்து கிளிகளைப்பயிற்றி வெளியிடத்துள்ள தினைக்கதிர்முதலியவற்றைக் கொண்டுவரச் செய்தும், அப்பறம்புமலையின் அகத்தே உண்டாய மூங்கில்நெல் தேன் கிழங்கு முதலியவற்றைக்கொண்டும் உயிர்வாழ்ந்திருந்தனர்.

"சுனையுண்டு தேனுண்டு சூழ்ந்துகிளி நல்கும்
தினையுண்டு வேய்நெற் றிரளுண்—டினிய
வருக்கைச் சுளையுண்டு வள்ளிக் கிழங்குண்
டிருக்கத் தகும்படையோ டேன்று"

என்னுமிப்பாடல் இச்செய்தியைத் தெரிவிப்பதாகும்.

இந்நிலையிற் புலனழுக்கற்ற அந்தணாளராகிய கபிலர் பாரியின் பெருமைகூறுமுகமாக அம்மூவேந்தரையும் நோக்கி,

"கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்புகொளற் கரிதே
... .. ... ... ... ...
யாமும் பாரியும் உளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே"

என்று வஞ்சமின்றிக் கூறியதையே வழியாகக்கொண்டு அப் பாரி வள்ளலை வென்றனர் என்ப.

இதனால் வலியமைந்த இயற்கையாணைப் போக்குவரத்துநிக ழாமல் தடைப்படுத்தியும் உணவுப்பொருளில்லாமல் அகத்திருந் தோரை வலியிழப்பித்தும் கொள்ளலாம் என்பது போதரும். செயற்கையாணாகிய மதிலைக்கோடல் எங்ஙனம் எனின், படை வீரரைக்கொண்டு நாவாய் தோணி முதலியவற்றின் மூலம் அகழி யைக்கடந்து முதலில் மதிற்பொறிகளை அழித்தும், உயர்ந்த ஏணி களைச்சார்த்தி மதின்மேலேறியும், வலிய யானைகளைக்கொண்டு மதில் வாயிற் கதவுகளைச் சிதைத்தும் உட்புகுவர் என்பது.

"கற்பொறியும் பாம்பும் கனலும் கடிகுரங்கும்
விற்பொறியும் வேலும் விலங்கவும்—பொற்புடைய
பாணிநடைப் புரவிப் பல்களிற்றார் சார்த்தினார்
ஏணி பலவும் எயில்"

என்னும் இப்பாடல் தடைப்படுத்தும் பல்வகைப்பொறிகளையும் கடந்து ஏணி பல சார்த்தப்படுதலையும், "அரவும் உடும்பும்போல் ஏறினார் ஏணி பலர்" என்னுமிது அவ்வேணியில் ஏறுவார்செயலை யும் புலப்படுத்துவனவாகும்.

இதன்கண் பற்றியதை விடாமைக்கு உடும்பையும் விரை வாகச் செல்லுதற்குப் பாம்பையும் உவமைகூறியிருத்தல் பொருத்தமே. இன்னும் கயிற்றினால் உடும்பைப் பிணித்து உட்பக்கம் எறிந்து மதிலைப் பற்றிக்கொள்ளச்செய்து அக்கயிற் றின்வழியாக மதில் ஏறிச்செல்லுதலும் உண்டு என்பர். "வங்கி னைப் பற்றி நீங்கா வல்லுடும் பென்ன லானான்" என்று பிடித்தபிடி விடாமைக்குப் பெரியபுராணத்தில் உடும்பை எடுத்துக்காட்டிய தும் இங்கே கருதத்தக்கது. "கதிரோடை வெல்களிறு பாயக் கலங்கி—உதிராமதிலும் உளகொல்" என்பதனால் யானைகளைக் கொண்டு மதிற்சுவர் சிதைக்கப்படுதலையும் அறியலாம். மிக்க வலி படைத்த அரசன் ஒருவன் பகையரசனது எயிலைக் கொள்ள விரும்பி முற்பட்டானாக, அவ்வரசனது வீரச்செயலைக்குறித்து,

"இற்றைப் பகலுள் எயிலகம் புக்கன்றிப்
பொற்றேரான் போனகம் கைக்கொள்ளான்—எற்றுங்கொல்
ஆறாத வெம்பசித் தீயால் உயிர்பருகி
மாறா மறலி வயிறு"

என்னும் புறத்திரட்டுப்பாடல் ஒன்று அறிவுறுத்தும் பொருள் வியக்கத்தக்கது. இதன்கண் எயிலகத்துப் புகுதாமல் உண்ணேன் என்று சூளுறவுசெய்த அவ்வரசனது வயிற்றுப்பசி, உயிர்களை அளவின் மிகவுண்ணுங் கூற்றுவனது வயிற்றுப்பசி அருமைக்குக் காரணம் ஆகும் என்று குறிப்பிட்டது நினைந்து இன்புறத்தக்கது.

மதிலகத்திருந்த அரசனுடைய மங்கலமுரசு நாடோறும் காலையில் ஒலிக்கும் வழக்கப்படி ஒலிப்ப, அவ்வொலி மதில் முற்று கையிட்டிருக்கும் அரசன் செவிப்பட்டவளவில் அவன் சினந்து தன் கைவேலை நோக்கினனாக, அக்குறிப்புணர்ந்த அவன் படை வீரர் இன்று இம்மதிலைப்பற்றி உட்சென்று "மாலைப்பொழுதில் ஆங்குச் சோறாக்குவேம்" என்று வஞ்சினங்கூறி அகப்பையையும் துடுப்பையும் எடுத்து மதிலகத்தே வீசினர் என்னும் கருத்துத் தோன்ற,

"காலை முரசம் மதிலியம்பக் கண்கனன்று
வேலை விறல்வெய்யோன் நோக்குதலும்—மாலை
அடுகம் அடிசிலென் றம்மதிலு ளிட்டார்
தொடுகழலார் மூழை துடுப்பு"

என்று புறப்பொருள்வெண்பாமாலையாசிரியர் நயம்படக்கூறுவர்.

இதுகாறும் கூறியவாற்றால் எயில்கோடல் என்பது பகையரசனது மதிலை வளைத்து முற்றுகையிடுதலாம் என்பதும், மதிலின் அமைப்பு இன்னவென்பதும், அம்மதிலையழித்து உட்புகுதல் இவ்வாறென்பதும், அதனால் அகத்திருந்தோனுக்கு நேரும் துன்பம் இன்னவென்பதும், எயில்கொண்டான் வெற்றிச்சிறப்பு இன்னதென்பதும் பிறவும் பெறப்பட்டனவாம்.

---

# வாழ்க்கையும் விஞ்ஞானமும்*

ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A, B.L.,

[ரு0-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## விஞ்ஞானமும் தத்துவமும்

இனி விஞ்ஞானத்துக்கும் தத்துவத்துக்கும் உள்ள தொடர்பைக் கவனிப்போம். விஞ்ஞானம் என்பது அறிவு (knowledge); தத்துவம் என்பது விவேகம் (wisdom) என்று பொதுவாகச் சொல்லலாம். அறிவுக்கும் விவேகத்துக்கும் இருக்கவேண்டிய தொடர்பே விஞ்ஞானத்துக்கும் தத்துவத்துக்கும் இருக்கவேண்டும். விஞ்ஞானத்தின் லக்ஷியம் விஷயங்களை உள்ளவாறு தெளிவுபட விவரித்துக்கூறுவது; தத்துவத்தின்லக்ஷியம் அவற்றின் உட்பொருளை அறிந்து சீராக விளக்குவது. கேவலம் அறிவுத் தொகுதியைமட்டிலுமே திரட்டிய ஒருவன் விவேகமுள்ளவனாக இருக்கவேண்டும் என்பதில்லை. கற்றறிந்த மூடர்களைப்பற்றிய கதைகள் பல நமது நாட்டில் வழங்கிவருகின்றன. செத்துக்கிடந்த சிங்கத்தைத் தமது வித்தையால் உயிர்ப்பித்து அதனால் உயிரிழந்ததாகக்கூறும் பஞ்சதந்திரக்கதையையும், வைத்தியன் ஜோஸியன் சங்கீதவித்துவான் ஆகிய பண்டிதர் மூவர் ஒன்றாகக்கூடிக் குடித்தனம் செய்யத்தொடங்கி அவலமுற்ற கதையையும் இவற்றுக்கு உதாரணங்களாகக் கூறலாம். அறிவுமட்டும் இருந்தால் போதாது, புத்தியும் விவேகமும் வேண்டும் என்பதையே இக்கதைகள் வற்புறுத்துகின்றன. அறிவை இவை குறைகூறவில்லை. சீரான அறிவு இல்லாவிட்டால் சீரான விவேகமும் இருக்கமுடியாது.

தாங்கள் கருதியவற்றை நிறைவேற்றுவதற்குவேண்டிய திறமையை மக்களுக்கு அளிப்பது விஞ்ஞானம். தாங்கள் பெற்றுள்ள அறிவால் உயிரைக்காப்பது மக்களுடைய நோக்கமா? அல்லது உயிரை அழிப்பதே மக்களுடைய கருத்தா? என்பது பௌதிகம் போன்ற விஞ்ஞானத்துறையினுள்ளே அடங்கிய விஷயம்

---

* மயிலைத்தமிழ்ச்சங்கத்திற்செய்த பிரசங்கத்தை ஆதாரமாகக்கொண்டு எழுதியது.

அன்று. சிறுபான்மை மானுஷிக சாஸ்திரங்களினுள்ளும் பெரும்பான்மை தத்துவசாஸ்திரத்தினுள்ளும் அடங்கியதே அது. கூரிய அரிவாளை வடித்துக்கொடுக்கிறான் கொல்லன். கொல்லனுடைய நோக்கம் எதுவாயிருந்தாலும், அரிவாளை ஏந்திய ஒருவன் அதைக் கொண்டு கதிரைக்கொய்து நாட்டுமக்களுக்கு உணவளிக்கிறான்; அதைக் கையிலெடுத்த மற்றொருவன் அதைக்கொண்டு தலையைக் கொய்து உயிர்க்கொலைபுரிந்து நாட்டில் துன்பத்தையும் பாவத்தையும் இயற்றுகிறான். அவனவனுடைய மனநிலைக்கு ஏற்றபடியே ஒரே கருவி தொழில்புரிந்து நன்மையையோ தீமையையோ விளைவிக்கிறது. அதைப்போலவே விஞ்ஞானமும்.

விஞ்ஞானம் நமது சக்திகளைப் பெருக்கிவிட்டது; நாம் அளவிறந்த திறமைகளைப் பெற்றவர்களாகிவிட்டோம். இத்திறமைகளைப் பெற்ற நாம் இவற்றையெல்லாம் எவ்வாறு பயன்படுத்தப் போகிறோம்?

இதைப்பற்றிச் சிந்தித்த ஆங்கில அறிஞர் ஒருவர் இங்கிலையைக் கண்டு மனம் தளர்ந்து, "நாம் நம்முடைய திறமைகளைச் சீராகப் பயன்படுத்தி, நன்னெறியிலே சென்று அனைத்துலகமக்களும் ஒரே நகரத்து வாழ்பவர்போல் ஒற்றுமைப்பட்டு இனிமையாக வாழ்வோமா? அல்லது விஞ்ஞான அறிவைத் தீயவழிகளிலே செலுத்தி நாகரிகத்தை அடியோடு கொய்துவிடப்போகிறோமா? இதைத் தெய்வத்தன்மைபொருந்திய தீர்க்கதரிசிகள் அறிவார்; நாம் அறியோம்" என்று வருத்தத்தோடு சொல்லுகிறார்.*

---

[*Science, which has already given the human species dominion over the lower animals and emancipated it to a remarkable extent from the overpowering forces of Nature, *can* provide the modern Solon with an effective means of abolishing the misery born of want, and of raising the millions to a level of material well-being at which they will be able to share, for the first time, in the fairest treasures of our whole cultural heritage. Only a prophet could tell us now whether the most precious instrument of human progress will be used to nip human civilisation in the bud, or to lay the foundation of a world-city.

—THE EARL OF LISTOWEL:
HUMAN AFFAIRS]

ஆயினும், மக்களுடைய மனம் பண்படுமாயின், அவர்களுடைய லக்ஷியங்கள் சீராக அமையுமாயின், விஞ்ஞானத்தாற்பெற்ற திறமைகளை அவர்கள் தீயவழிகளிலும் சமூகத்துக்குக்கேடுவிளைக்கும் செயல்களிலும் வீணுக்கமாட்டார்கள் என்பது உறுதி. அறிவுத்தொகுதியைப்பெற்று, அதனுல் பண்பட்ட மனமானது சிறந்த நோக்கங்களை உடையதாகுமாஞல் மக்களின்வாழ்க்கை சிறப்படையும், ஜனசமுதாயம் இனிமையாக நடைபெறும். இது தத்துவம் செய்துதரவேண்டிய உதவி; என்றாலும், சிறந்த விஞ்ஞானத்தை அடிப்படையாகக்கொண்டதாகத் தத்துவம் இருந்தாலன்றித் தத்துவம் சீர்குலைந்துபோகும். வாழ்க்கையின் லக்ஷியங்களையும் வாழ்க்கை நெறிகளையும் தத்துவசாஸ்திரமானது சீராகக் குறிக்கொண்டு மக்களுக்கு உதவிபுரியவேண்டுமாயின், அதுவும் விஞ்ஞானமுறைகளைப் பின்பற்றவேண்டும். ஒழுங்கான விஞ்ஞானமுறையில் நிகழ்த்தப்படும் சோதனைகளையும் ஆராய்ச்சிகளையும் அமைத்துக்கொண்டு, சீரான அறிமுறைகளையும், கிரமமான தர்க்கமுறைகளையும் பின்பற்றித் தக்க முடிவுகளை அறிவோடொத்தமுறையிற் கொள்ளவேண்டும்.

ஆகவே வாழ்க்கைக்கு வழிகாட்டியாக உள்ளது தத்துவம்; அதற்குத் துணையாயுள்ளது விஞ்ஞானம். விஞ்ஞான அறிவைச் செவ்வையாகத் திரட்டுவதற்கு உரிய வழிகளை வகுத்துக்கொடுப்பவை தத்துவசாஸ்திரமும் அதன் பகுதிகளாகக் கருதப்படும் (Epistemology என்னும்) அறிமுறைநூலும், (Logic எனப்படும்) தர்க்கசாஸ்திரமும், (Psychology எனப்படும்) உளநூலும் ஆம். இவற்றைத் துணைக்கொண்டே சீரான விஞ்ஞானஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. இந்நூல்கள் காட்டும் வழிகளுக்குப் புறம்பாக நடைபெறும் ஆராய்ச்சிகளும், கொள்ளும் முடிவுகளும் போலிவிஞ்ஞானமாகவே வந்துமுடியும். அவற்றுல் மக்கள் ஏமாற்றமடைவார்களே தவிரப் பயன்பெறமாட்டார்கள்.

இன்னும் ஒன்று: எல்லா விஞ்ஞானங்களும் இன்னும் செழிப்படையவில்லை. இது கவனிக்கவேண்டிய விஷயம்.

"விஞ்ஞான அறிவும் தத்துவஞானமும் தம்மிடையே இல்லாத காரணத்தால் அனேகம் பழங்கால நாகரிகங்கள் குன்றி நசித்துப்

போயின. அந்நாகரிகங்களுக்கு உண்டாகிய ஆபத்துநிலை இப்பொழுது நமது நாகரிகத்துக்கும் ஏற்படும்போலிருக்கிறது. அவை அழிந்துபோனதைக் காட்டிலும் மிகத் துரிதமாக நமது நாகரிகம் அழிந்துவிடக்கூடும். இதற்குக்காரணம் நாம் விஞ்ஞான அறிவைப் பெற்றிராததன்று; சமூகசாஸ்திரங்கள் என்பவை இன்னும் நம்மிடையே போதிய வளர்ச்சியடையாமல் பின்னிடைந்துநிற்பதே காரணம் ஆகும். இப்பொழுது எல்லாத் துறைகளிலும் வெற்றிபெற்று மேன்மேலும் ஓங்கிவளர்ந்துவரும் பௌதிகசாஸ்திரங்கள் சமுதாயவாழ்க்கையிலே காணப்படும் நிலைகளை நாளுக்குநாள் நிமிஷத்துக்கு நிமிஷம் மிகமிகத் துரிதமாக மாற்றிய வண்ணமாக இருக்கின்றன. இவ்வாறு மிகவும் வேகமாய் மாறுபடும் வாழ்க்கைநிலைகளோடு நமது சமுதாயவாழ்க்கையை ஒன்றுபட்டு அமையச்செய்யவல்லவை தத்துவசாஸ்திரத்தால் நெறிப்படுத்தப்பட்ட சமூகசாஸ்திரங்களேயன்றி வேறல்ல''* என்று மக்டூக்கல் என்னும் தத்துவசாஸ்திரப்பேராசிரியர் கூறுகிறார்.

அவர் கூறியபடி, விஞ்ஞானம் செறிந்த இக்காலத்திலும் இன்னும் முன்னேற்றமடையாத துறைகள் சில இருக்கின்றன. சமூகசாஸ்திரங்கள் எனப்படும் பகுதிகளில் இன்னும் போதிய அளவு ஆராய்ச்சிகளும் முயற்சிகளும் நடைபெறவில்லை. அத்துறைகளைச் சேர்ந்தவை என்று கருதப்படும் விஷயங்கள் இன்னும் சீராக வகுத்து முறைப்படுத்தப்படவில்லை; விஞ்ஞானங்கள் என்று கூறுவதற்கு ஏற்ற பதவியையே அவை இன்னும் அடையவில்லை:

---

Professor WILLIAM MC. DOUGALL F R S.

* Older civilisation have decayed and passed away because they locked both science and philosophy. Ours is threatened with a similar fate and with more rapid destruction than they: not through lack of science, but through one sided development of the sciences, through the backwardness of the social sciences, which alone, under the guidance of philosophy, can adjust our social systems to the rapid changes of conditions of life produced at an ever-accelerating rate by the victorious physical sciences.

அவற்றை விஞ்ஞானமுறையில் நன்கு ஆராய்ந்து, தத்துவசாஸ்திரத்தின் உதவியால் அவற்றைப் பண்படுத்தவேண்டும். பண்பட்டபின் அவற்றை மானுஷீகவிஞ்ஞானங்கள் என்று கூறலாம்.

இவ்வாறு விஞ்ஞானம் தத்துவம் ஆகிய இரண்டும் ஒன்றுபட்டு எல்லாத்துறைகளிலும் ஒத்துழைத்தால், அறிவும் விவேகமும் பூட்டிய வாழ்க்கையிரதமானது ஒழுங்கானநெறியில் விரைந்து சென்று முன்னேற இயலும்.

## முடிவுரை

வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பொருளும் மனமும் பின்னியே காணப்படுகின்றன. பௌதிக விஞ்ஞானங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை வேண்டியவாறு இயற்றி உதவுகின்றன. மானுஷீக விஞ்ஞானங்கள் மக்களின் மனத்தைப் பண்படுத்தி, மக்களின் சமூகவாழ்க்கையையும் தனிவாழ்க்கையையும் சீர்பெற நடத்த உதவுகின்றன. விஞ்ஞானம் கேவலம் குற்றேவல் புரியும் பணியாள்மட்டுமன்று; நமது மனத்தைப் பண்படுத்தி அதனுள்ளே உள்ளொளிதிகழவும் அடக்கமும் சாந்தியும் நிலவவும் துணைசெய்யும் ஆசிரியனாகவும் அது உள்ளது. விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி இயற்றப்படும் எண்ணிறந்த நற்பொருள்களைக்காட்டிலும் விஞ்ஞான ஆராய்ச்சியால் உண்டாகும் சீரிய மனநிலை மேலானது. கோபதாபங்களாலும் ஆசாபாசங்களாலும் கற்பனைக் கோட்பாடுகளாலும் உண்மையை நழுவவிடாமல் உள்ளவற்றை உள்ளவாறே தெரிந்து சிந்திக்கசெய்வது விஞ்ஞான மனநிலை. சமூகத்தார் அனைவரிடையேயும் இம்மனநிலையைப் பரவச்செய்வது மிகமிக இன்றியமையாதது. பக்ஷபாதங்களால் பாதிக்கப்படும் மனித விவகாரங்களினிடையே பக்ஷபாதம் என்பதையே அறியாத விஞ்ஞானத்தை நாம் பயன்படுத்துவோமானால் நமது வாழ்க்கை நலம்பெற்று மேன்மையுறும்.

---

ஸ்ரீ:

# மதிப்புரை

---

ஆசார்யவள்ளல் அளித்த அமுதம்:—இது, ஸ்ரீ தேசிகப்ரபந்தவ்யாக்யான அரங்கேற்று உத்ஸவத்தில் பங்களூர் ஸ்ரீமதி M. ராஜலக்ஷ்மிஅம்மாள் எழுதி வாசித்தது; பின்பு புத்தகமாக அச்சிடப்பெற்றது; ஸ்ரீதேசிகனுடையவைபவங்களும் அவர்செய்தருளிய சில திவ்யஸூக்திகளும் கொண்டு, ரஹஸ்யார்த்தங்களும் இடையிடையே விரவிவரும்படி இனிய தமிழ்நடையாய் அமைந்தது. இதை எழுதியவருடைய ஞானபக்தியாதிகளும் கல்வியறிவும் நன்குமதிக்கத்தக்கன. ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அம்மாள் மேலும் ஞானபக்தியாதிகள்மிக்கு விளங்குமாறு இறைவன் அருள்புரிக. இப்புத்தகம் வேண்டுவோர் மதுரை அட்வகேட் ஸ்ரீ N. R. கிருஷ்ணஸ்வாமிஐயங்காரவர்களுக்கு முக்காலணாத் தபால் ஸ்டாம்பு அனுப்பிப் பெறலாம்.

---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகவெளியீடுகளான (1) பழமொழிக்கதைகள், (2) பிழையின்றிப்பேசுக, (3) எங்கள் ஊர்ச் சந்தை என்ற புத்தகங்கள், சிறுவர் சிறுமியர் தெரிந்துகொள்ளவேண்டிய பல செய்திகளைப் பெரும்பாலும் வீட்டுநிகழ்ச்சிகளைக் கொண்டு கதையுருவில் இனிதுவிளக்குவன; சிறுவர்க்கு ஏற்ற பாடபுத்தகமாகும் தகுதிவாய்ந்தன. இவற்றை எழுதியுதவிய திருவாளர் வ. சுப்பையர் அவர்கள் பாராட்டற்குரியர். இவற்றுள், பழமொழிக்கதைகளுள் அவ்வப் பழமொழிகளின் சொற்பொருள்விளக்கத்தோடமையாமல் அவற்றால் உய்த்துணர்பொருளும் விரிக்கப்பெற்றிருப்பிற் பெரிதும் சிறக்கும். பழக்கத்தால் மக்கள்பேச்சிலும் எழுத்திலும் நேரும் பலவகைப்பிழைகளையும் விளக்கித் திருத்தங்கள்காட்டும் பிழையின்றிப்பேசுக என்னும் புத்தகம் சிறுவர்க்கேயன்றிப் பெரியோர்க்கும் பயன்படும். எங்கள் ஊர்ச் சந்தை என்னும் புத்தகத்தில் இடையிடையே காணப்படும் 'பூமாலை சாற்ற வேண்டும்,' 'வாழைக்காய் சீப்புச்சீப்பாகக் குலையிலிருந்து கீறி உரித்தெடுத்து வைக்கப்பெற்றிருந்தன', 'வாழை இலை விற்கப்பட்டது', 'பெங்களூர் கத்தரிக்காய்', 'அறுகீரை' முதலியன ஏற்றபெற்றி திருத்திக்கொள்ளவேண்டியனவாய் உள்ளன. இவற்றின் விலை ஒவ்வொன்றுக்கும் 4 அணா. வேண்டுவோர் ஷை சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகத்திற் பெறலாம்.

---